# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in, Contact no: 044-28389041

**No:TNTEU/R/Affiliation/2020/414** **Date:09.03.2020**

**முனைவர் வை.பாலகிருஷ்ணன், Ph.D.**
பதிவாளர் (பொ)

**பெறுநர்**

முதல்வர்கள்/செயலாளர்கள்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன்
இணைவுபெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்.

**அய்யா/அம்மையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - ஆட்சிமன்ற குழு ஆணைக்கிணங்க – கல்வியியல் கல்லூரிகள் தங்கள் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள அரசு / அரசு உதவிபெறும் /ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பள்ளிகளை தத்தெடுத்து ஆசிரியர் கல்வியை மேம்படுத்துதல் - தொடர்பாக.

**பார்வை:** Resolution of the Syndicate on Item No.8, dated on 21.01.2020

****

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழுவின் ஆணைக்கிணங்க, இணைவுபெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகளும், தங்கள் கல்லூரி அமைந்துள்ள பகுதியில் செயல்படுகின்ற அரசு, அரசு உதவிபெறும் மற்றும் ஆதிதிராவிட மற்றும பழங்குடியின பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட பள்ளியை தத்தெடுத்து, கீழ்குறிப்பிட்ட கல்விச் சார்ந்த செயல்பாடுகளில் தங்கள் கல்லூரியின் பங்களிப்பை வழங்கி ஆசிரியர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து பல்கலைக்கழகத்தின் நோக்கத்தை சிறப்பாக செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- ❖ தத்தெடுத்த பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அவர்களின் தனித்திறமைகளை வளர்பதற்கு தேவையான பயிற்சியளித்து கற்பித்தலை மேம்படுத்துதல் (Providing personality and leadership training to the teachers to improve the quality of teaching in the adopted school)

- ❖ மருத்துவ கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மருத்துவனையின் அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபட்டு அவர்களின் தனித்திறன்களை மேம்படுத்துவது போன்று, கல்வியியல் கல்லூரிகளில் B.Ed/M.Ed பட்டப்படிப்பில் பயிலும் மாணவ, மாணவிகளை சிறு குழுக்களாக (அதிகபட்சம் 5 நபர்கள்) பிரித்து **கல்லூரியின் தினசரி வகுப்புகள் பாதிக்கபடாதவாறு** சுழற்சி முறையில் தத்தெடுத்த பள்ளிக்கு அனுப்பி கற்பித்தல் பணி தவிர (except teaching) பள்ளி மேலாண்மை மற்றும் பள்ளிகளில் நடைபெறும் விளையாட்டு, கலைப்போட்டிகள், அறிவியல் சார்ந்த பிற செயல்பாடுகளில் பங்கேற்க்க செய்து, மாணவ, மாணவிகளின் தனித்திறமையை மேம்படுத்துதல் (Involving student teachers (peer group- maximum 5 members only) in the school administrations, sports meet, cultural events, scientific activities and educational administration in the adopted school by rotational basis **without affecting the regular classes-** except teaching).

[த.பி.பா]

❖ தத்தெடுத்த பள்ளியின் கற்றல் - கற்பித்தல் செயல்முறையின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளைச் செய்தல் (Providing necessary facilities to the adopted school for improving in the quality of teaching -learning process).

மேலும், கல்லூரிகள் தாங்கள் தத்தெடுத்த பள்ளியின் விவரத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து புரிந்துணர்வு ஒப்பந்த படிவ நகலுடன் இணைத்து வருகின்ற 10.04.2020-குள் பல்கலைக்கழகத்திற்கு சமர்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

9.3.2020

பதிவாளர்(பொ)

**இணைப்பு:**

1. மாதிரி படிவம்
2. பள்ளியை தத்தெடுப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்த படிவம்

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY**

(Established under Tamil Nadu Act 33 of 2008)

Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.

Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in

## ***Details of School Adaptation***

| Name of the District | Name of the College | College Code |
|---|---|---|
| | | |
| **Name of the School** | | |
| **Category**(Government/Aided/Welfare) | | |
| **Address of the School with Contact Number** | | |
| **Name of the Head Master** | | |
| **Contact Number** | | |
| **Date of MOU** | | |
| **Signature of the HM with Seal** | | |

| Signature of the College Principal with Seal | Signature of the College Secretary with Seal |
|---|---|
| | |

**Note: Please enclose the Copy of the MOU between the College and School**

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

## (Memorandum of Understanding)

## (to be signed on Rs.10 Stamp paper)

2020 – ஆம் ஆண்டு…………..மாதம் …………நாள் அன்று, ……………மாவட்டம், ……………….வட்டம்………………….முகவரியில் இயங்கும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவுப்பெற்ற……………..கல்வியியல் கல்லூரியின் முதல்வர்/செயலர் ……………ஆகிய எனக்கும் (நபர்.1)

……………மாவட்டம், ……………….வட்டம்………………….முகவரியில் இயங்கும் அரசு / அரசு உதவிப்பெறும் / பழங்குடியின உயர்நிலை / மேல்நிலை பள்ளியின் தலைமை ஆசிரியர் …………………ஆகிய தங்களுக்கும் (நபர்.2) இடையே இன்றைய தேதியில் செய்யப்பட்ட புரிதுணர்வு ஒப்பந்தம் யாதெனில்,

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக்குழுவின் ஆணைக்கு இணங்க 1-ம் நபரின் கல்லூரி நிர்வாகமானது இரண்டாம் நபரின் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிக்கும் இடையே கீழ்கண்ட குறிக்கோள்களை செயல்படுத்துவதின் பொருட்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

குறிக்கோள்கள்

- ❖ பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கு கல்லூரி நிர்வாகத்தினால் தேவையான தனித்திறன் பயிற்சியினை வழங்கி கல்வி தரத்தை மேம்படுத்துதல்.
- ❖ பள்ளியில் அவ்வப்போது நடைபெறும் விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகள், அறிவியல் சார்ந்த பிற செயல்பாடுகளில் கல்லூரியில் பயிலும் B.Ed/ M.Ed மாணவர்களை சிறு குழுக்களாக (அதிகபட்சம் 5) பிரித்து பங்கேற்க செய்து மாணவர்களின் தலைமை பண்பை மேம்படுத்துதல்.
- ❖ பள்ளியின் கற்றல், கற்பித்தல் செயல்முறையின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை செய்தல்.
- ❖ பள்ளியின் மாணவர் சேர்க்கையினை ஊக்குவிக்க தேவையான உதவிகளை செய்தல்.

மேலும், அரசு பள்ளிகளின் கல்விதரத்தையும், ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் பயிற்சி மற்றும் கல்வி சார்ந்த கருத்தரங்குகளில் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவதற்கு தேவையான உதவிகளை கல்லூரியின் சார்பில் வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை தவிர பள்ளியின் மேம்பாட்டிற்கு கல்லூரி நிர்வாகத்தினால் தேவையான அனைத்து உதவிகளை வழங்குவதற்கு உறுதி செய்வதை இரு நபர்களாலும் முழுமையாக ஏற்றுக்கொண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

**பள்ளியின் தலைமையாசிரியர்** **கல்லூரி முதல்வர்** **கல்லூரி செயலர்**

**முன்னிலை: Director,**
**MOU, Tamil Nadu Teachers Education University, Chennai.**